Clr.No.19

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.420/2021 |
| Sessions | : | |
| Deposition of witness for | : | Prosecution PW 2 |
| Name | .. | குமார் |
| Father's/Husband's Name | .. | கண்ணப்பிள்ளை |
| Village | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 62 |

Date : 08.10.2024

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.

முதல் விசாரணை:-

1. நான் சாத்துமா நகர் பகுதியில் வசித்து வருகிறேன். கடை வைத்து நடத்தி வருகிறேன். எதிரியை நான் பார்த்ததில்லை. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்த பொழுதும், எனக்கு எந்த சங்கதியும் தெரியாது என்று தான் கூறினேன்.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையின் படி சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

2. கடந்த 19.10.2017 அன்று இரவு சுமார் 08.30 மணி அளவில், எம்ஜிஆர் சாலை கிராம தெரு சந்திப்பு அருகே கதிர் மற்றும் வெங்கடேசன் ஆகிய இரண்டு நபர்கள் நடந்து வந்து கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது எதிரி கத்தியை காட்டி கதிரின் கழுத்தில் கத்தியை வைத்து அவரிடம் அவருடைய பக்கத்தில் இருந்த ரூபாய் 1500/- மிரட்டி பறித்து சென்றார் என்பதை நான் பார்த்தேன் என்று போலீசாரிடம் கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.